189

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

வடலூர் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் என வழங்கும்

திருவருட்பிரகாசவள்ளலார் திவ்ய சரித்திரம்.

இது

வள்ளலார் மலரடிக்கு அன்புபூண்டொழுகும் TANJOR

அடியார்க்கடியார்

கும்பகோணம், பெரியகடைவீதி, கரூர் ஜவுளி வர்த்தகம்

மு. ச. சரவணமுத்துச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.



கும்பகோணம் யதார்த்தவசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1935.

இதன் விலை] [அணா $1\frac{1}{2}$.

உ
சிவமயம்.
கணபதி துணை.

முகவுரை.

முத்தமிழ் வல்ல வித்துவ மணிகளே!

நமது நற்றமிழ் நாட்டில், தெய்வத் திருவருள் கைவரப் பெற்றுச் சிவகரண மொழிந்து சிவகரணமுடையராய்த் திகழ்ந்து, 'தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்னும் தண்ணளியுடன் மொழிக்குமொழி தித்திக்கும் முத்தமிழ்ப்பனுவல் பலவற்றால் தமது அநுபவ நிலையை அங்கையிற் கனியெனச் சங்கையற விளக்கி அற்புதச் செயல்கள் பற்பல புரிந்து அருட்டிருவாளராய் விளங்கிய ஆசிரியர் அநேகராவர். அவ்வழியில், சென்ற நூற்றாண்டினிடையிற்றோன்றி திருவருட்பா என்னும் தெய்வச் செந்தமிழ்த் திருமுறையாம் பெருமறையைத் திருவாய் மலர்ந்தருளி, சமரச சுத்த சன்மார்க்க நெறிகள் நமது நாட்டிற் றழைத்தோங்கச் செய்த நல்லாசிரியர், திருவருட்பிரகாசவள்ளலார் என்னும் சிறப்புப்பெயர் பூண்டு விளங்கும் ஸ்ரீஇராமலிங்க சுவாமிகள் ஆவார். அவ்வருள் வள்ளலாரது வாழ்க்கை வரலாறு, அவரது முதல் மாணவரும், சென்னை மாகாண அரசியற் கல்லூரியிற் றமிழ்ப்புலமை நடாத்திய தகைமை வாய்ந்த உபயகலாநிதிப் பெரும்புலவரும் ஆகிய தொழுவூர் ஸ்ரீவேலாயுதமுதலியாரவர்களாற் சொற்பொருட்டிறனும் கற்பனை நயனுஞ் செறிந்த செந்தமிழ்ச் செய்யுணடையாலும் உரைநடையாலும் செவ்விதி னியற்றப்பட்டு, திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகள் வெளிவந்தபோழ்தே அவற்றுட னிணைத்து வெளியிடப் பெற்று விளங்குகின்றது. பின்னர், வள்ளலார் மாணவர் குழாத்துள் ஒருவராகிய காரணப்பட்டு சமரச பஜனை கந்தசாமிபிள்ளையவர்களாலும் மிக விரிந்த உரைநடையில் வரையப்பட்டு வழங்குகின்றது. இவ்வாறிருக்க, இதுபோது திருக்குடந்தைப் பெரியகடைவீதி கரூர் ஜவுளி வர்த்தகம் திரு. மு. ச. சரவணமுத்துச் செட்டியாரவர்கள், வள்ளலாரின் திவ்ய சரித்திரத்தை, கலிவெண்பா சிந்து ஆசிரியப்பா ஆகிய பாவினங்களாற் பாடி அடியேனிடம் வாசித்துக்காட்டி, 'இதனைப் பரிசோதித்து அச்சிடுவித்தல் வேண்டும்.' எனத் தெரி

வித்தனர். திரு. செட்டியாரவர்கள் எனக்குப் பல்லாண்டுகளாகப் பழக்கமுடையவர். என்பால் மிகுந்த பற்றுடையவர். இவர் இலக்கிய இலக்கண நூல்களிற் பெரிதும் வரன்முறையான பயிற்சியில்லாதவர். இத்திறனுடைய இன்னோர்க்கு, 'எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி' என்று வழங்கும் பெற்றிமையுடைய வெண்பாவியல் முற்றுங் கெழுமிய செய்யுள் இயற்றும்வன்மை எங்ஙனம் உண்டாயிற்று ? என்று எனக்குப் பெருவியப்பும் மகிழ்வும் பெருகின. அடிகளிடத்தும் அவரருளிய பாக்களிடத்தும் இளமைப் பருவந்தொடங்கியே ஆராத காதலுடைய அடியேன் அவர் சரித்திர விஷயமான இப்பணியை மறுத்தற்கு அஞ்சுற்று, இந்நூலை இயன்ற வரை ஒருவாறு செப்பஞ்செய்து அச்சிடுதற்குதவினேன். சில எழுத்துச் சொற்பிழைகளையும், கலிவெண்பாவிற் சிற்சில பகுதியிற் றளைபிறழ்ந்திருந்ததையும் திருத்தினேனேயொழிய பிறவொன்றும் என்னாற் செய்யப்பெறவில்லை. 'பித்தா எனினும் பிறப்பறுப்பான் நம்பெருமான்.' என்பது வள்ளலார் திருவாக்கு. 'முத்தமிழால் வைதாரையுமங்கு வாழ வைப்போன்.' என்பது அருணகிரிநாதர் அருள்வாக்கு. செட்டியாரவர்கள், வள்ளலாரது மலரடிக்கண்ணே மாறாத அன்புடையவராய், வடலூர் சிற்றம்பல தெரிசனத்தில் மட்டற்ற சிரத்தாபத்தி வாய்ந்தவராய், அடிகளது திருவுருவப்படம் ஒன்றைத் தமது ஆவணத்தின் மேன்மாடியில் அழகிய பீடத்தில் அமைத்து, அதற்கு நித்திய பூசை நியமந் தவறாது புரிந்து, அப்பெருமானது திருவவதாரத் திருவிழாவும் மாகேசுவர பூசையும் சென்ற பத்தாண்டுகளாகச் சிறப்புறச் செய்துவரும் விரதம் வழுவாதவராய் விளங்குபவராவர். அல்லும் பகலும் அநவரதமும் திருவருட்பாப் பாராயணம் படிந்த மனமுடையவராதலால், அவ்வழியே எளிதிற் பாடுந்திறன் இவருக்கு அமைந்ததுபோலுமெனக்கண்டு, சொன்னோக்கும் பொருணோக்கும் ஆகிய எந்நோக்கையும் செட்டியாரது நன்னோக்கிற் பொருத்திக்கொண்டு, நாமெல்லோரும் இத்திவ்ய சரித்திர நூலை நன்கு மதித்து மகிழவேண்டும்.

கும்பகோணம்.
9—1—1935.

உ. ரா. சுவாமிநாதன்,
தமிழ்ப் பண்டிதன்.

சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்கசுவாமி.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை.

வடலூர் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் என வழங்கும்

திருவருட்பிரகாசவள்ளலார் திவ்ய சரித்திரம்.

கலிவெண்பா.

சித்தி விநாயகனே செல்வத் திருமகனே
முத்திதரு ஞான முதல்வனே—எத்திசைக்கும் 1
ஓருருவா யீருருவா யொன்றிரண்டு மூவுருவாய்ச்
சீருருவாய்ச் செல்வத் திருவுருவாய்—நேராக 2
ஆருருவா யெங்கு மநந்த மறையுருவாய்ப்
பாருருவா யோங்கும் பரவெளியாய்—ஓருருவில் 3
அண்டபகி ரண்ட அசர சரமதுவாய்
நின்றிலங்கி யெங்கு நிறைவோனே—தொன்றுதொட்டு 4
நின்னடிமை யுன்னடிக்கு நேரிலொரு விண்ணப்பம்
புன்மொழி யானல் பொறுத்தருள்வாய்—நன்மைதரு 5
ராமலிங்க மாமணியை நான்பாடிப் போற்றுதற்குச்
சேமமுற நாவிற் றிரமருள்வாய்—பூமிதனில் 6
கல்லாத நானுங் கலிவெண்பாப் பாடுதற்கு
எல்லா நலனு மெனக்கருள்வாய்—புல்லறிவேன் 7
பாடும் வகையதுவும் பாட்டின் பயனதுவும்
கூடுந் திறமுங் குறிப்பறியேன்—நாடும் 8
இலக்கணவி லக்கியங்க ளெரிதுகை மோனை
துலக்கி யருளித் துணைசெய்—பலாக்கமுகு 9
தென்னமரச் சோலை திகழ்பெரிய மாஞ்சோலை
உன்னிதவா ழைச்சோலை யுள்ளதுவாய்—கன்னலொடு 10
தென்னரந்த நாவல் திராட்சைரச முந்திரியும்
மன்னுபல சோலைகளும் வாவிகளும்—நன்னல்மார் 11

செண்பகப்பூஞ் சோலை சிவந்தகுருக் கத்தியுடன்
தண்பனிநீர் வீசுந் தடங்களும்—வண்பொழில்சூழ் 12

மந்தாரை முல்லை மருவு மருக்கொழுந்து
செந்தா மரையினது சீரழகும்—வந்தமர்ந்து 13

கோகிலங்க ளன்னங் குலவு மயிலுமுடன்
மோகமுறக் கூடியங்கு மொய்த்திடவே—நாகணவாய் 14

கிள்ளைபல புள்ளினங்கள் கீதமுறு வண்டினங்கள்
வள்ளல் புகழைவெகு வாயுரைக்க—உள்ளதொரு 15

சீர்பெருக வோங்குஞ் சிதம்பரத்தி னேர்வடக்கி
லூர்பெருகும் பல்வளமு முற்றிடுமூர்—பார்புகழும் 16

நன்மருதூர் என்றுபல நாவலரின் பாவலரின்
சொன்மருவப் பெற்றவருட் சோதியூர்—பொன்மருவும் 17

அவ்வூ ரதற்கும் அதனருகி லுள்ளதற்கும்
ஒவ்வோர் கிராமமே உள்ளதற்கும்—செவ்வே 18

கணக்கெழுதும் வேலை கருணீக ரான
பிணக்கிலா ராமைய பிள்ளை—இணக்கமுற 19

இப்படியே நாளு மிவர்மனையாள் தன்னுடனே
ஒப்புமையில் லாதங் குறைந்திடுநாள்—செப்பும் 20

விரதம் பலவும் மிகநியம மாகக்
கரவின்றி நோற்றதிதி கட்குச்—சுகமாக 21

அன்ன மளிப்பதுவு மாடை கொடுப்பதுவும்
இன்னம் பலவு மியன்றளவு—சொன்னதொரு 22

இல்லறமே நல்லறமாய் யார்க்கு மிகவினிதாய்த்
தொல்லுலகில் வாழ்ந்து சுகித்திடுநாள்—சொல்லரிய 23

தன்மனைவி காலம் தவறிடவே துக்கித்திங்
கென்மனைவி யென்வாழ் விதுவென்றே—பன்னி 24

நினைந்து நினைந்துருகி நேர்வதெலா நேர்க
அனைத்தும் பிராரத்த மாகும்—எனத்துயரால் 25

வாடும்போ தவ்விடத்து வந்த வுறவினர்கள்
நாடிய நல்லறத்துக் கொத்தவளாய்த்—தேடியவர் 26

அச்சமொடு நாணமுமெய் யன்புக் குரியவளாய்
நிச்சலுந்தன் வீட்டில் நிறைபசியால்—பிச்சையென 27

வந்தோருக் கன்னமிட்டு வாரா தெதிர்பார்க்கும்
சுந்தர ஞானஞ் சொலிப்பவளாய்—இந்தமுறை 28

வந்து சிலகாலம் வாழ்ந்திறந்து போனார்கள்
முந்தைந்து தாரம் முடிந்ததுவே—நிந்தையறு 29

தாரமெல்லா மிப்படியே தானிறந்து போனதன்றி
வாரமுறு மோர்மனைக்கு மைந்தனில்லை—பேரின்றி 30

இவ்வுலக வாழ்க்கை யினிவேண்டா மென்றெண்ணி
யெவ்வுலகும் போற்று மிறையவனைச்—செவ்வையுற 31

எண்ணியெண்ணிப் பார்த்தே யிடைவிடாவி சாரமதை
நண்ணி யிருந்திடத்தன் நற்குலத்தோர்—மண்ணுலகில் 32

எங்கெங்குந் தேடிப்பார்த் தெவ்விடமு மொவ்வாமல்
அங்கங்கு நாடி யலைந்திடுங்கால்—செங்கமலம் 33

மன்னேரி சூழும் வளமார் வயல்சூழும்
பொன்னேரி யாகும் புகழூரில்—என்னம்மை 34

சின்னம்மை யென்னுந் திருமகளைப் பேசிமணம்
நன்னர் வதுவைபுரி நாட்பார்த்துப்—பின்னுமந்தக் 35

காரிகையார் தன்வீட்டிற் கல்யாண மென்றுசொல்லிக்
கூரியநா ளங்கே குறிப்பிட்டு—நேராக 36

ஊருக்கு வந்தங் குறவினர்கள் மாப்பிளையும்
நேரிட்டுக் கல்யாணம் நேர்ந்தபின்பு—சீருடைய 37

பெண்ணும் மணமகனும் பேரன் புடனவர்கள்
தண்ணம் மருதூரைத் தான்சேர்ந்து—மண்ணகத்தில் 38

இந்த விளங்கொடிக்கிங் கீடாக மற்றொருபெண்
எந்த வுலகத்தும் யாமறியோம்—முந்தியிவள் 39

வந்தவிருந் தோம்பி வருவிருந் தோம்புவளாய்
சிந்தையி லெண்ணம் சிறந்தவளாய்—தந்தைதாய் 40

வந்தழைத் தாலும் வருபவள்போல் தான்காட்டி
பந்தமறு ஞானம் பகர்பவளாய்—நிந்தையுறுக் 41

கற்புக் கினியவளாய்க் கண்டவர்க்குத் தெய்வமதாய்
நற்புகழி னியாவர்க்கு நல்லவளாய்ப்—பொற்பார் 42

கணவன் மனமுமந்தக் கன்னிமன முஞ்சேர்ந்
திணைபிரியா வன்றி லெனவே—தணவா 43

துடனு முயிரும்போ லொத்திருந்து வாழ
மடவாற்குக் கெர்ப்பமது வாய்க்கத்—திடமுடனே 44

ஒன்றிரண்டு திங்கள் உறுதிபெறக் கண்டவுடன்
சென்றெட்டுத் திங்கள் சிறப்பாக—நன்றதுவாய்ச் 45

சீமந்தஞ் செய்து சிறந்ததிங்கள் பத்ததனில்
தாமந்த ஆண்குழந்தை தானீன்றாள்—ஆமதற்கே 46

ஈரெட்டு நாளி லினியபொற் காப்புமிட்டு
நாளிட்டுப் பார்த்து நலுங்கிட்டுச்—சீரார் 47

சபாபதி யென்று தகுநாம மிட்டே
உமாபதி யான வொருவற்—கவாவால் 48

அபிடே கலங்கார வாரா தனைகள்
சுபமுறவே செய்து சுகித்துத்—தபசிமுதல் 49

ஆதுலர்க்கு மாதவர்க்கு மந்தணர்கள் யாவர்க்கும்
கோதில்பல தானங் கொடுத்தந்த—மாதரசி 50

தேசாருண் ணமூலையாஞ் செல்வியைச் சுந்தரத்தை
நேச மிகுபரசு ராமனெனப்—பேசுபுகழ் 51

மக்கட்பே றுற்று மனத்தோர் குறைவின்றி
மிக்க களிப்பாய் விளங்கிடுநாள்—தக்கதொரு 52

சன்யாசி வேடமொடு சாமிநட ராஜனுமே
மின்னிடையாள் சின்னம்மை வீட்டிற்போய்—நன்மையுற 53

உச்சிப் பொழுதி லுவமையிலாச் சங்கமரும்
பிச்சையெனக் கேட்கப் பெருமகிழ்வாய்—நச்சிமிகு 54

நாணமட மச்சமுறு நாயகியார் சின்னம்மை
காணவந்த மாதவர்தங் கால்பணிந்து—பேணி 55

அறுசுவையோ டன்னமந்த ஐயர்க் களிக்க
உறுசுவை யுண்டங் குவந்து—பெறுசுவையால் 56

ஆனந்த மாகியந்த ஐயர் விபூதிதந்து
ஞானவுரு வாமகவை நம்போல்நீ—யீனுகென 57

மாதவன் போனவுடன் மங்கை யவள்கணவன்
ஆதவன்போல் வீட்டை யணுகவே—பேதமுறு 58

வந்தகொழு நற்கு வரிசையா யன்னமிட்டுச்
சிந்தை மகிழ்ந்து சிறந்தவளாய்ப்—பந்தமறு 59

சாமியார் வந்ததுவும் சாப்பிட்டுப் போனதுவும்
க்ஷேமமுற நீறளித்த சீர்த்தியதும்—காமமுறு 60

ஐய ருரைத்தமொழி யத்தனையுந் தானுரைத்தே
உய்யும் படிக்குரைத் துள்ளமதெலாம்—தெய்வநிக 61

ரான புருஷனுக்கே அத்தனையும் சொல்லியிவள்
தேனமிர்தம் போலுந் திருவுடையாள்—வானநிகர் 62

நாத னருட்செயலை நாமறிய மாட்டோமே
யாதுஞ் சிவன்செய லென்றெண்ணிக்—கோதில் 63

இனம்பிரியா மான்போ லிருவருங் கூடிச்
சினமறியா வாழ்வு செலுத்தக்—கனமார் 64

வளர்பிறைபோ லன்னைகரு வாய்த்திடவே யேதுந்
தளர்வடையா வன்னை தளர்ந்தே—உளமதனில் 65

நாழியொரு நாளாகி நாளொன்று திங்களாய்க்
காழியரு ளசலத்தைக் கைதொழுது—தோழியுடன் 66

ஒன்பது மொன்று முளதிங்கள் பத்ததனில்
செம்பவள மேனி சிவந்ததுபோல்—நன்கமைசு 67

பானுபுரட் டாசி பகரிரு பத்தொன்றி
லானவாதி வாரமது சித்திரையிற்—பானு 68

உதயமிரு பத்தொன்ப தோடுமுக்கா லுக்கு
மதியமென மைந்தன் மணியாய்—உதித்தவுடன் 69

புண்ணியனைக் கண்ணியனைப் புத்திரனை மித்திரனைக்
கண்ணிற்கண் டார்கண்ணே கண்ணதுவே—மண்ணிலுளோர் 70

வந்தவர்கள் யார்க்கும் வழங்கியே சர்க்கரையைச்
சிந்தை மகிழ்ந்து சிறப்பாகச்—சந்ததமும் 71

எந்தைபிரான் கோயில்க ளெங்குமபி ஷேகஞ்செய்
தந்தமைந்த னைக்காத் தருள்கவெனத்—தந்தையரும் 72

தாயாரும் வேண்டித் தகுராம லிங்கப்பேர்
வாயார வாழ்த்தி வழங்கியே—நேயமுடன் 73

தொட்டிலிட்டுத் தெய்வத் துதிபலவுஞ் செய்திட்டுச்
சட்டமுட னேயிசையாய்த் தாலாட்டி—மட்டிலன்பார் 74

அன்னை யெடுத்தணைத்தே அன்புடனே பாராட்டிக்
கன்னல்மொழி வாழ்ந்து களிப்புறவே—கொன்றை 75

அணிந்தாடு மம்பலத் தார்க்குநிக ராகத்
தணிந்தாடும் பிள்ளை தவழப்—பணிந்தவர்க்கு 76

முத்தி கொடுப்பவன்போல் முத்தமிட அன்னைக்கு
நித்தங் கொடுத்திடுவான் நேயமுடன்—பெற்றவளும் 77

பிள்ளைப் பெருமானைப் பெம்மானுங் காணவென்றே
உள்ளமகிழ்ந் தன்னைபிதா வோங்குமருள்—வள்ளல் 78

நடராஜன் சன்னிதியை நண்ணியே யோர்நாள்
திடமுடனே தோத்திரங்கள் செய்ய—இடையிலுறும் 79

பிள்ளைப் பெருமான் பெருமானைப் பார்த்தவுடன்
துள்ளிச் சிரித்துச் சிரந்துளக்க—உள்ளதொரு 80

கோயிற் குருக்கள் குழந்தை சிரிப்பதைக்கண்
டாயிதற் கானந்த வல்லியே—நேய 81

நடராஜ னிவ்வுருவே நல்லம்மை நீயே
கடவு ளமிசமிது காணென்—றுடனே 82

குழந்தையைத் தானெடுத்துக் கொண்டவனுந் தானும்
வளந்தருதன் வீடு வரவே—குழந்தையது 83

நாளுக்கு நாளாயோர் நாழியொரு மேனியாய்
வேளுக்கு மேலாய் விளங்கிடுங்கால்—தூளிதமாய் 84

நீர்பூத்த மேனி நிறம்பூத்த தங்கமதாய்
கூர்பூத் தறிவு குணம்பூத்துப்—பார்தனிலே 85

ஓடி விளையாடி யொத்ததொரு பிள்ளையுடன்
கூடிவிளை யாடுங் குறிப்பதுகேள்—நாடியொரு 86

கோவிலுடன் கோபுரமுங் கொண்டுசிவ லிங்கமுடன்
செயுமிந்த மண்ணதனாற் செய்தவனைத்—தாயவளும் 87

கிள்ளை மொழியோ குயின்மொழியோ கேடில்லாப்
பிள்ளை மொழிந்த பெருமொழிதான்—விள்ளமிர்த 88

வாய்மொழியா லம்மை வரிசையுட னன்னமிட்டுத்
தூய்மொழியா லன்னை துணைவனுக்கே—சேயிதற்குத் 89

தக்கவய தோரைந்து தானாகி மேலுமினி
மிக்கவய தாகி விளங்குமுனே—பக்குவமாய்ப் 90

பள்ளியில் வைத்துப் படிப்பதற்குத் தம்பிதனை
உள்ளநாள் நல்லதுவா யோர்ந்திடுங்கள்—கள்ளமிலா 91

சாமைய பிள்ளையவர் நல்லதொரு நாட்பார்த்துத்
தாமுணர்ந்து வாத்தியாரைத் தானழைத்து—நேமமதாய் 92

ஓலை யெடுத்தே யொழுங்காகத் தான்வாரிச்
சீலமுட னேடதுவுஞ் செப்பனிட்டு—மாலயனும் 93

காணாக வோரெழுத்தைக் கண்டு தெளிவதற்கே
ஆனா அரியென்ற அக்ஷரமும்—கோனாட 94

நானா ரெனவறியு நல்லறிவா ரக்ஷரமும்
மோன மெனச்சொல்லு மோனாவும்—வானறியா 95

மூவெழுத்துந் தானே முடிவிலது வோரெழுத்தாய்
ஆவெழுத் தான அரிச்சுவடி—யாவு 96

மெழுதி யவர்முடித் தேரம்ப ஞைரைத்
தொழுது பலவாய்த் துதித்துத்—தழுவி 97

அரிச்சுவடி சொல்லிவைத்தே அந்தணரைப் பூசித்
துருத்திகழும் வள்ளலென வுற்ற—ஒருத்தனெனும் 98

ராமலிங்க மாமணியை நற்ருயுந் தந்தையரும்
காமருறு வெண்ணீறு காப்புமிட்டுத்—தாமவர்கள் 99

வந்த அதிதிகட்கும் மாதவர்க்கு மன்னமிட்டு
சந்ததமு மிப்படியே தானிருக்க—வந்தவர்கள் 100

தக்கமரி யாதைசெய்து தானவர்கள் போனபின்பு
மிக்க களிப்பாய் விளங்கிடுநாள்—பக்கமதில் 101

பால ருடன்கூடிப் பள்ளிக்குப் போவதுவும்
சீலமுடன் வீடுவந்து சேர்வதுவும்—கோலமுற 102

நாளுமிவ்வா ருக நடந்துவருங் காலத்தில்
ஊழ்வினையால் தந்தை யுயிர்பிரிந்தார்—தோள்வலிபோய் 103

அம்மை யவருடனே யைந்துபிள்ளை தானுமாய்ச்
செம்மையுடன் வாழ்ந்து செழித்திடுங்கால்—தன்மைமிக்க 104

பிள்ளைச பாபதிக்கும் பின்னுமந்த நால்வருக்கும்
உள்ளமகிழ் கல்யாண முற்றதனுல்—எள்ளளவும் 105

சிந்தை திரியாச் சபாபதி பிள்ளையவர்
தந்தை யிறந்ததையும் எண்ணுமல்—சந்ததமும் 106

தாயார் தமக்குரிய தம்பிமற்றத் தங்கையர்க்கும்
சேய்போல் அவர்க்குதவி செய்கைகளும்—தாய்போலத் 107

தம்பிராம லிங்கற்குத் தான்படிப்பு சொல்லியபின்
அம்புவியின் மேலான ஆசானை—நம்பிச் 108

சபாபதி யென்னும் சமயவாச் சாரி
உமாபதிக்கு நேரா யுரைக்கைக்—கமைந்தவரைக் 109

கண்டு நமஸ்காரஞ் செய்துகா ணிக்கையாய்க்
கொண்டிவற்குக் கல்வி கொடுத்தருள்க—என்றுமிகப் 110

போற்றித் துதிசெய்து போய்வாரே னென்றுவிடை
யேற்றுத் தனதிருக்கை யெய்தினர்காண்—ஏற்ற 111

மதராசில் தானெருபால் மற்றதமிழ்ச் சங்கம்
எதிராகச் சாலை யிரண்டும்—மதுரமதாய்த் 112

தானடத்தி யூதியத்தைத் தானடைந்து வாழ்ந்திடுநாள்
நானடங்கப் பெற்றதம்பி ராமலிங்கம்—மானமுறப் 113

பள்ளிக்குச் சென்று படிப்பவன்போ லங்கிருந்தே
உள்ள சுவடியைவீட் டுள்வைத்துப்—பிள்ளையவர் 114

காலைக் கடன்முடித்துக் கட்டழகார் நீறிட்டுக்
கோலமுடன் கந்தனுறை கோயில்வந்து—மாலைமட்டும் 115

பாடுவது மாடுவதும் பாமாலை சூடுவதும்
கூடுவது மன்பாற் குதிப்பதுவும்—தேடிச் 116

சபாபதியா மண்ணலவர் சற்றுநிதா னித்தே
உமாபதி பிள்ளை யுவனே—சுபமாய்ப் 117

படிக்குந் திறமறியான் பள்ளிக்குப் போகான்
வடிக்கும் பனுவல் வழங்க—லடுத்ததிது 118

விட்டகுறை தொட்டகுறை மேவும் விதிமுன்னாள்
இட்டபடி யாகுமென் றேகினார்—தொட்டமுதல் 119

நாள்தோறு மிச்சீர் நடந்துவர வோர்தினத்தில்
வாள்போலுங் கண்ணிதன் அண்ணிபுமே—ஆளனவர் 120

உண்டுவெகு நேரமட்டு முண்ணவிலை தம்பியென்று
சென்ற வுடன்வெளியே சீராக—நின்றிருந்த 121

தம்பியைத் தான்கண்டு தண்ணீரைத் தான்கொடுத்து
வெம்பு மனத்தோ டிலைபோட்டுப்—பம்பும் 122

அறுசுவையோ டன்னம் அவர்க்கிலையி லிட்டு
மறுகுறவே கண்ணீர் வடிய—அருகிருப்பார் 123

ஏறிட்டுப் பார்த்துளநைந் தேனம்மா என்னசுவை
யூறுணவு நேரத்தோ டுண்ணலையால்—மாறுற்ற 124

அன்னை முதனீயு மானவுற வத்தனையும்
என்னை நினையா திருந்தக்கால்—பின்னையுமே 125

வந்துபோய் வந்திருந்தும் வாராமல் நானிருந்தும்
சிந்தை மயங்காதீ ரென்றுசொல்லிச்—சுந்தரமாய்க் 126

கையிற் செபமாலை கண்ணுடி வாசகமும்
உய்யும் திருவொற்றி யூர்சென்று—செய்யுமந்தக் 127

கோயில்வல மாகவந்து கும்பிட்டுத் தானெழுந்து
தாயிடத்தில் தானும்வந்த தன்மையைப்போல்—நேயம் 128

நினைந்து நினைந்துருகி நேயம் முதிர்ந்து
கனிந்து கனிந்துதிரக் கண்ணீர்—வனைந்துநிதம் 129

எண்ணிறந்த பாக்க ளியற்றுவதும் போற்றுவதும்
கண்ணிறைந்த கண்ணீர் கலங்குவதும்—பண்ணிறைந்த 130

தேவார வாசகமும் சீரொற்றி யூர்ச்சிறப்பும்
நாவாரப் பாடிநன் ளுள்கழியத்—தாவாத 131

செல்வம்பெற் ருற்போல் சிவநேசச் செல்வர்களும்
நல்விருந் தானபல நண்பர்களும்—பல்வகையாய்க் 132

கூட்ட நடுவிற் குலவுமொரு சந்திரன்போல்
நாட்டமிலா தெங்கு நயந்திடுநாள்—தேட்டமுற 133

வீடுவந்த தம்பிக்கு மேன்மையுறு மன்னமிட்டு
நாடா திருந்து நலிந்தவளை—வாடுகின்ற 134

அண்ணியைக் கண்டுதன் னண்ணனுக் கென்னவென்
றண்ணியே கேட்டவுட னண்ணியுமே—வண்மையுறும் 135

அண்ண னவர்கட் கதிகசுர மானதினுல்
பண்ணூர் புராணம் படிப்பதற்—கெண்ணியவர் 136

போவதில்லை நானுமினிப் போவதுதா னுரென்று
தேவருளைச் சிந்தனைசெய் தேயிருக்கேன்—ஆவலுடன் 137

நான்போய்வா ரேனென்று நண்ணியுரைத் தண்ணனிடம்
தான்போய்க்கே ளென்றுதம்பி தான்விளம்ப—மான்போன்ற 138

அண்ணி யிதைக்கேட்டவ் வண்ணனுக்குச் சொன்னவுடன்
நண்ணி யவருமிக நல்லதென்ருர்—தண்மையுடன் 139

போக விடைகொடுத்துப் புத்தகமுங் கைகொடுக்கத்
தாகமொடு வேகமதாய்ச் சங்கமதிற்—சோகமுற 140

வந்ததிருக் கூட்டமதில் வள்ளலவர் வந்திருந்து
முந்தை புராண முதற்கதையை—முந்தியவர் 141

கேட்ட விடமிருந்து கேட்கும் புராணமதை
நாட்டமுறப் பார்த்து நவிலலுற்ருர்—வாட்டமற 142

வாசித்தோர் காதை வரிபிளந் தர்த்தமதை
யோசித் துவமையுப மேயமும்—பாசுரங்க 143

ளொன்றிரண்டு செய்யுளுக் கொப்பில் பலபொருளும்
நன்றுரை செய்ய நயமுறவே—மன்றிருந்தோர் 144

பாட்டு முடிந்தவுடன் பக்கத்தி லுள்ளவர்கள்
நாட்டம்வைத்து ஸ்வாமிகளை நாளைக்கும்—கூட்டமதில் 145

தாங்களே இக்கதையைத் தான்முடிக்க வேண்டுமென்று
ஈங்குளோர் கேட்டற் கிணங்கியே—பாங்குடனே 146

இக்கதையை முற்று மிருந்துரையைப் பூர்த்திசெய்
தக்கதைமு டித்தே யருளுவீர்—மிக்கபல 147

நண்பர்கள் கூடியங்கே நாடித் தமயனிடம்
கண்போன்ற தம்பிதனை நாளுமுதல்—என்போன்ற 148

எல்லவரு மிக்க இனிதா யவர்மொழியை
நல்லா விருக்குதென்று நாடியதால்—வல்லோர் 149

வரவேண்டு மென்று வணக்கமதாய்க் கேட்க
உரமிகும் வண்ணமதற் கொப்பித்—திரமுடனே 150

தம்பியைத் தானழைத்துத் தான்போய்ப் படித்துவர
நம்பியே சொல்ல நயமுடனே—தம்பி 151

படிக்கத் தொடங்கியப் பாட்டின் உரையை
அடுக்கடுக்காச் சொல்லி அழகாய்—வடித்ததமிழ் 152

செய்யு ளலக்கலக்காய்ச் சிக்கெடுத் தக்கணமே
கையில்வளர் நெல்லிக் கனிபோலே—செய்ய 153

சபாபதி பிள்ளையவர் சந்ததியி லுற்றே
உமாபதி பிள்ளை யுவனென்—றுபாயமுடன் 154

வீட்டினிற் றன்மனையை மேவி யவளிடத்தில்
கூட்டுப்பா லுண்ட குமரகுரு—கேட்டமுதல் 155

தம்மவரும் தம்மனையாள் தானவர்க் கஞ்சினராய்
அம்மவரைக் கண்டுமிக வையனே—இம்மையினில் 156

நாம்செய்த புண்ணியமோ நற்றவத்தா லீன்றெடுத்தோர்
தாம்செய்த புண்ணியமோ தானறியோம்—ஆமதனுற் 157

கோன்செய்த யிச்சையினுல் கொண்டகுல மோங்குதற்கு
வான்செய்த மாமணியே வந்துதித்தான்—உன்செய்த 158

புண்ணியத்தால் தம்பிக்குப் போற்றி யமுதளித்தாய்
புண்ணியமே யென்பிறப்பும் பூமியிலே—கண்ணிமைபோல் 159

காத்திடுவாய் தம்பிதனைக் காணு னெனையவனும்
சீர்த்தியதாய்ப் பாரென்று சென்றபின்பு—மாத்திரையில் 160

அண்ணியா ரன்னமிட் டன்பாயுபசரிக்கத்
தன்னையொக்கு மன்பரவர் தானழைக்கப்—பின்னுமவர் 161

சாதுசங்கக் கூட்டமதிற் சார்ந்தொளிசே ராதவன்போல்
ஆதரிக்கு மன்ப ரநேகருடன்—கோதில் 162

திருக்கோலங் கொண்ட திருவொற்றி தன்னைக்
கருக்கோலங் காணுமற் காண—விருப்பமுடன் 163

கண்டார் திருக்கோலங் கண்கொள்ளாக் காட்சியுடன்
உண்டா ரமிர்த முடல்குளிரப்—பண்டையநாள் 164

செய்ததொரு பாவமெல்லாம் சேதித் தருள்கொண்டு
மெய்புளகம் கொள்ள விதிர்விதிர்த்து—வையகத்தோர் 165

காணுப் பெருமானைக் கண்டுதிருச் சன்னிதியில்
நாணு வெளியனேன் நான்காணக்—கோணுமல் 166

பற்பல பாசுரங்கள் பாடிப் பலகாலும்
நற்புக ழெங்கு நடந்திடுங்கால்—கற்புடைய 167

அன்னைதன் மக்களொடு மானமக வத்தனைக்கு
முன்னங்கல் யாண முடிந்ததனுல்—என்னிரண்டு 168

கண்மணியா மெங்கள் கருந்தனமாம் மெய்ப்புகழ்சேர்
பொன்மணியாம் ராமலிங்கப் பிள்ளைதனக்—கெண்ணியசீர்க் 169

கல்யாணஞ் செய்தேயென் கண்குளிரக் கண்டுவக்கச்
செல்வியுண் ணுமுலேயின் சேய்த்திருவை—யெல்லாரும் 170

நல்ல முகூர்த்தத்தில் நாள்பார்த்துப் பட்டதனை
யில்லறத்துக் கொத்தா ளிவளென்றே—சொல்லுமந்த 171

ராமலிங்கங் கல்யாண நாணியமித் தானதினுல்
தாமவனைக் கண்டு தமயனவர்—ஆமிதனுக் 172

கன்னைமுத லானவரு மம்மைநம தன்னையினுக்
குன்னறுப தாண்டின்மே லுற்றதனுல்—முன்னந் 173

தமக்கைதன் பெண்ணைமணந் தான்முடியென் கின்ருள்
எமக்குமதே நின்னெண்ண மென்ன—சுமக்கவெகு 174

பாரம்வெகு பாரமது பார்தனிலே பார்த்தளவில்
கோரமிகு தாரம் கொடும்பாரம்—சாருமதில் 175

கூறு யிரண்டுதுண்டாய்க் கொண்டாலும் வேண்டாங்காண்
கூறுமல் வேறிடத்தி லேகொடுங்கள்—பேருர் 176

சபாபதி யண்ணலொடு சார்ந்ததிரு வன்னை
உமாபதி போற்பெரிய ரோங்குத்—தமர்மிகுந்த 177

ஆசைப் பெருக்கெடுத் தன்னைதந்தைக் கொப்பான
மாசறுச பாபதியாம் வண்மையரும்—நேசமுறத் 178

தம்பியைப் பார்த்தீன்ற தாய்சொல்லைத் தட்டாமல்
நம்குருவின் சொல்லை நழுவவிடா—தென்பொருட்டா 179

இல்லறமே நல்லறமா யெண்ணிதிரு வள்ளுவரும்
சொல்லுஞ் சனகன்முதல் தூயவரும்—நல்லருட்கு 180

சேலர் கபீரும் திகழ்துளசி தாசருமே
சீலமுற இல்லிருந்து சித்திபெற்ருர்—ஞாலமதில் 181

மாசற்ற ஞானமதால் மாராஜ பூபதிகள்
நேசமுடன் முத்தி நிலையுற்றார்—நீசற்றும் 182

தள்ளாம லென்மொழியைத் தான்கேட்டிங் கில்லறத்தில்
எல்லாரும் போல வினிதிருப்பாய்—மெல்ல 183

நடக்குமதென் றூனு நவில்செருக் கற்று
நடப்போருக் கல்லால் நடவா—துடுக்கா 184

யடக்கமுடி யாநெஞ் சதுவிழுக்க நானு
மடக்கி யிழுக்க மதியால்—நடுக்கமுற்று 185

நானிருக்கும் போதுசுக நாயகியாள் தன்னுடனே
நீயிருக்க வென்றால் நிலையாது—கோனவரின் 186

சம்மத மெப்படியோ அப்படியே தானாகும்
நும்மனம்போல் செய்வீ ரெனநுவன்றார்—தம்மனம்போற் 187

சோசியரைத் தானழைத்துத் தூயமுகூர்த் தம்வைத்தார்
மாசிலரு ளாற்செய்தார் மாங்கிலியம்—ஆசையதால் 188

அன்றிரவே சாந்தி முகூர்த்தமதுஞ் செய்தக்கால்
இன்றிரவே நன்றிரவா மென்றெண்ணித்—தூன்று 189

வலையில்வந்த மான்போல் வருந்திவாச கத்தை
நிலையாக நின்றமனை தன்னைக்—கலையதனை 190

வாசிக்கத் தீபமதை வைத்திடுவா யென்றுசொல்ல
நேசித்த நாணமதால் நின்றிருந்தார்—ஆசையுறத் 191

தானாக தீபமதைத் தானெடுத்து வைத்தவரும்
ஏனோ வெனக்குவிதி யென்றெண்ணி—வானாடர் 192

போற்றுதிரு வாசகத்தைப் போது விடியமட்டும்
ஆற்றலுட னோதிமுக் காடுமிட்டு—மாற்றி 193

எழுந்து வெளியில்வந் தேதொன்றும் பாரா
தழுந்தியஞா னங்கொண் டகல—விழுமனத்தால் 194

பெண்ணும் வெளியில்வந்து பேசா திருந்தவளும்
நண்ணுமந்தத் தாயிடத்தில் நாடியவள்—கண்ணதுபோல் 195

காத்துவந்த தாயிடத்திற் கண்டதுவுஞ் சொன்னதுவும்
ஆத்த முடனழுது போனதுவும்—பார்த்ததுபோல் 196

எல்லா முரைத்தே யினிப்போன தெவ்விடமோ
எல்லா மறிந்திடுங்க ளென்றுசொல்ல—மெல்ல 197

வலையைக் கிழித்துவெளி வந்ததொரு மான்போல்
அலைமனத்தா லெங்கு மலைந்தே—சிலையதுபோல் 198

உற்று மிகவுநினைத் தொன்றுமவர்க் கொவ்வாமல்
ஒற்றியூர் போவதே யுள்ளதென்று—கற்றறிந்த 199

அன்ப ருடன்கூடி ஆனசில நண்பருடன்
பொன்போல வங்கே பொலிவுற்று—வன்புலால் 200

உண்ணா திருக்கு முபந்யாச மற்றுமுள
எண்ணா யிரம்பா விசைத்தங்கே—பண்ணால் 201

அருட்புகழைப் பாடி அழுதழு தங்கே
திருப்புகழைப் பாடித் தினமும்—மருட்புகழால் 202

வந்தழைக்கத் தம்மவர்கள் மாறாகக் கூறியதும்
நொந்திளைத்துப் போனவர்கள் எத்தனையோ—முந்தைமுதல் 203

கண்ணாடி வைத்தெதிரில் கண்சிமிட்டாப் பார்வையுடன்
உண்ணாடி வேலனைத்தி யானிக்கப்—பண்ணாடும் 204

ஆறு முகமதுவா யாறிரண்டு கண்ணதுவாய்
ஏறுமயில் வேலதுவு மேற்றதுவாய்க்—கூறும் 205

சடாட்சரமு முத்திரையுந் தண்ணா ரருளும்
கடாட்சித் தனுமெவரே காண்பார்—கடாட்சமது 206

பட்டதுவு மிவ்வுலகப் பற்றற்று நின்றவராய்
மட்டடங்காப் பாக்கள் வழங்குநராய்ச்—சுட்டகன்ற 207

ஞானமதே பூஷணமாய் நாவே சரஸ்வதியாய்த்
தேனமிர்த மேசொற் றிரளதுவாய்—வானவரும் 208

தேடியுங் காணாத் திருவொற்றி யூரதனிற்
பாடிப் பரவசமாய் நின்றழுது—நாடிசில 209

அன்பருடன் கூடி அவர்போகு மத்தருணம்
துன்ப மழைவந்து தோய்ந்ததனால்—தன்பருவம் 210

ஆனதினா லம்மழையி லாங்கவர்க ளோடனுமே
தானிவரு மோர்வழியிற் சாரலுற்றார்—போனவுடன் 211

ஒப்புயர்வில் லாததிரு வொற்றியூ ரன்னடுவில்
செப்பற் கரியசிங் காரமதாய்—இப்புவியில் 212

காணாத காட்சி கடவுளே யிவ்வுருவாய்
மாணாரு மண்டபத்தின் மேலாகத்—தாணுவெனப் 213

பொன்பூத்த மேனிப் புகழ்பூத்த நீறதுவாய்த்
தண்பூத்த நெஞ்சந் தளிர்பூத்து—விண்போல் 214

கமலமுகம் பூத்த கருணை நிறைந்தே
அமல குருவு மமர்ந்து—மலமகன்ற 215

மாணவர்நால் வர்க்கு மதித்துசிவ போகமதைத்
தாறுகும் பக்குவத்தைத் தான்சொல்லக்—காணவுமே 216

தூசு வொதுக்கிவெகு தூரத்தில் நின்றவரும்
மாசில் மனத்தால் மகிழ்ந்தவரை—நேசித் 217

திருகை தலைமீதி லேற்றித் தொழுது
கருநீக் கவர்கால் பிடித்துக்—கருவில் 218

இனிப்புகு தாவண்ணம் என்குருவே யிந்த
அனித்தியவாழ் வத்தனையு நீக்கித்—தனித்திருந்து 219

தன்னையறிந் தின்பமுற்றுத் தானேதா னுயிருக்க
என்னையாட் கொள்ள விதுசமயம்—பின்னைத் 220

துணையெனக்கு வேறில்லை துன்பந் தொலைக்கும்
அணையெனக் கியாருமிலை யையா!—தினையும் 221

உலகப்பற் றைநீக்கி யுள்ளதுபோ லேநான்
விலக லுறுதிருக்க வெந்நோய்—விலக்கி 222

இலகு பரம்பொருளை யின்னதெனத் தேற்றி
நலமருள்வாய் ஞானகுரு நாதா!—நிலமதனில் 223

வாழுந் தரமெனக்கே வாழ்வுற் றிடல்வேண்டும்
ஆளுந் தரநினக்கே யல்லாமல்—ஊழதுவும் 224

உற்றிருந் தாலு முனைக்கண்ட மாத்திரத்தில்
அற்றுவிடு மென்ற னருவினைகள்—கற்றறியாப் 225

பேதையிலும் பேதை பிழையிருப்பி னும்மென்றன்
வாதையினை நீக்கி வரமருள்வாய்—பாதமலர் 226

பற்றினேன் பற்றலது பற்றற்ற நின்னடிமை
பற்றியதாற் பற்றறக்கண் பார்த்தருள்வாய்—மற்றிதுசொல் 227

ராமலிங்கம் தன்மொழியை நற்குருவுங் கேட்டவுடன்
ஆமென்று சொல்லிமிகு வன்புடனே—நீயு 228

மொழிந்த மொழியதுதான் மெய்ம்மொழியா னுலும்
எழுந்துனது வீட்டினுக் கேகிச்—செழுமையுறும் 229

உன்னினத்தி லுள்ளவர்க்கும் உன்றுய் தமர்தனக்கும்
இந்நலத்தைச் சொல்லிநீ யிங்குவந்தால்—முன்னவனைக் 230

காட்டும்வே தாகமமும் காணுமந்தத் தத்துவமும்
வாட்டமறச் சொல்வேன் மதியென்னக்—கேட்டுப் 231

புலிக்குப் பயந்தொருவன் பின்னுமங்கே போகத்
தலைப்படலை யொக்குமில்லஞ் சாரல்—புலைச்சிறியேன் 232

ஆனாலு மென்னைவிட லாகாதா காதையா!
தேனார் மலரடியென் சென்னிவைப்பாய்—நானோர் 233

சிறியேன் திருவருளின் சீரறியேன் எல்லாம்
அறிவார் சிறியர்பிழை யரயார்—நெறிநிறுத்த 234

வந்ததிரு வள்ளலுக்கு வாய்புதைத்துக் கைகட்டிச்
சிந்தை மயங்கித் தியங்கிடவே—நொந்தவனை 235

உச்சியினிற் பிச்சைகொண் டுண்ணுதற்குச் சம்மதமோ
லச்சையுறின் ஞான நிலைபெறா—திச்சை 236

ஒருநா ளொருபொழுதே யுண்டுபசி யாறி
வருநாளெல் லாமந்த வாறே—திரமாக 237

இப்படியே நீயு மிருப்பதெனி லிங்கிருக்க
அப்படியின் றேலிங் ககலுகெனத்—துப்புடையான் 238

சாமிகுரு நாதனே சாஷ்டாங்கம் நின்னடிமை
ஆமிது தானா அரிதாங்கொல்—தாமதுவும் 239

கொச்சியினிற் சோறெடுத்துக் கொங்கணத்தி னீராடி
உச்சியினி லுண்பதற்கிவ் வொற்றியினிற்—பிச்சை 240

எடுத்துவா வென்றாலும் யானிசைவே னின்சொற்
றடுத்துலகி லொன்றுந் தமியேன்—தொடுக்கேன் 241

கிடைத்ததெது வானாலும் கீழ்மேலெண் ணாமற்
படைத்ததையே யுண்பன்பா ராமல்—சடத்தினிலே 242

இச்சையெனக் கெள்ளளவு மில்லையென்று சொன்னாலும்
நிச்சயமாய்த் தாமறிந்து நிர்ணயுங்கள்—பக்ஷமதாய்ப் 243

பார்க்குமீன் குஞ்சுகளைப் பார்ப்பதுபோ லென்றனையும்
நோக்குங் கடைக்கண்ணால் நோக்கியெனைக்—காக்க 244

விழுந்தழு தோலமிட வேறொன்று மெண்ணா
தழுந்தமார் போடங் கணைத்துத்—தொழும்பன் 245

கரத்தைப் பிடித்தருகிற் கட்டி யணைத்துச்
சிரத்திற்கை வைத்துத்தீட் சித்து—வாத்தைக் 246

கொடுத்தவற்கு மூலமனு கூடைந் தெழுத்தை
யெடுத்துரைத்துத் தேசிகனா ரேக—அடுத்த 247

மடமுதலாய் மாணாக்கர் மற்றவ் விடந்தான்
திடாதுவாய்ப் போனவுடன் ஸ்வாமி—திடமா 248

யுபதேசஞ் செய்த உடனே மறைய
வடவாலின் கீழிருந்த வள்ளல்—அடையவே 249

நான்செய்த புண்ணியத்தால் நம்பெருமான் ஆண்டென்னைத்
தேன்செய் மலரடிக்காட் செய்வித்த—தூன்செய்த 250

கண்ணாலென் கண்மணியைக் காணக் கிடைக்காத
அண்ணாநீ யெங்கொளித்தாய் அண்ணாவே—மண்ணகத்தில் 251

என்னை யொருபொருட்டாய் எண்ணியிக் கோலமதை
மன்னிவந்த மாயமென்ன மாயமிது—முன்னே 252

அவசரத்தில் நால்வருக்கு மானவுப தேசம்
பவசா கரங்கடக்கப் பாரிற்—றவவேடம் 253

பூண்டானைப் புண்ணியனைப் போயொளித்த கண்ணியனை
மீண்டொருகாற் காண்பனோ மேதினியில்—வேண்ட 254

வருவாரோ வந்தொருக்கால் மாவின் னருளைத்
தருவாரோ அன்றித் தாரோ—பெருகுங் 255

கவலையெலாந் தீர்த்த கடவுள் மறையச்
சவலையெண்ண மெல்லாந் தணந்தே—சிவவின்பம் 256

பொங்கித் ததும்பிப் புளகாங் கிதமுற்றே
யெங்கு மதுவா யிருந்திடவே—கங்குகரை 257

காணாத பாசுரங்கள் கண்டுவெகு நேரமட்டும்
தோணாமை லொன்றுந் துதித்தவராய்த்—தானாய்ப் 258

படுத்ததிண்ணை தன்னிற் பசிநோய் வருத்த
அடுத்தவரைக் கேட்கா தயர்வாய்ப்—படுத்தவரைத் 259

தட்டி யெழுப்பியந்தத் தற்பரனு மீச்சுரனும்
வட்டிலன்னந் தந்து மறையவர்போல்—இட்டசிவன் 260

தட்டையெடுத்துக்கொண்டு தம்பதிக்குப் போனவுடன்
சட்டமா யுண்டங்குத் தானுறங்கி—விட்டனர்காண் 261

நின்றொருநா ளிப்படியே நேரமலா நேரத்திற்
கொண்டுவந் தன்னங் கொடுப்பதனைக்—கண்டிங்கு 262

வந்தவர்கள் தாங்கள் வருத்தமிக வைத்துவிட்டேன்
தந்தவர்க ளன்னமது தங்களுக்கே—சிந்தைசெய்து 263

நானுனக் கன்னம் நயந்தளிக்க வில்லையின்று
தானுனக்குச் சொர்ப்பனமோ தான்காணாய்—ஞானமதால் 264

தாமுணர்ந்து தந்தை தனயன் பசிக்குதவி
நீமுனனைந் தேகியதென் னீர்மையிஃ—தான்கன்றைத் 265

தேடிவந்து பால்கொடுத்துச் செல்வதுபோ லென்றன்னை
நாடி யமுதளித்த நாயகமே—கூடியவி 266

ரண்டற்றே யொன்று யிருவினையு மும்மலமும்
கண்டித்தாட் கொண்டிடவுங் காண்பனோ—ஒன்றற்றே 267

உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நானிருந்து
தெள்ளமுத வெள்ளம் தினம்பரவ—உள்ளமதில் 268

தானிருந்து தானாய்த் தனிக்கவிடா தென்னையுநீ
தானிருந்து நின்னொடுநான் றானிருக்க—ஊனிருந்த 269

என்றேகம் நின்றேகம் என்னுயிர்நின் றன்னுயிரே
பொன்றேக மான புரிசடையோய்—என்றன் 270

உடல்பொரு ளாவியெலா முன்றனுக்கே யீந்தேன்
திடமுறுபற் றில்லை சிறிதும்—புடவிபுகழ் 271

தில்லைமுத லான சிவதலங்கள் நான்றெரிசித்
தல்லலறத் தீர்த்தங்க ளாடியபின்—நல்ல 272

அடியார் பணிக்கென்னை யாளாக்கி விட்டால்
துடியாம லென்மனமுந் தூய—அடிமலரை 273

நின்று நமஸ்கரித்து நேரிலொரு விண்ணப்பம்
என்றுநீ என்னெஞ் சிருந்தருள்வாய்—சென்றுவா 274

உத்தரவு பெற்ற வுடனேசென் னைக்குவரச்
சுற்றிலுமெய் யன்பர்குழாம் சூழ்ந்திருக்க—எத்திசைக்கும் 275

போகாமல் வள்ளல் பொதுவாக அன்பர்களும்
வாகாக வோரிடத்தே வைக்கவென்றே—ஏகமதாய்த் 276

தாசில்முதல் வக்கீல் தமிழறிஞர் பற்பலரும்
மாசற்ற பண்டிதரும் மற்றவரும்—நேசமுடன் 277

எல்லோருங் கூடி யினிதாக ஸ்வாமிகளே
நல்லா தரவாய் நயந்திருக்கக்—கல்லாத 278

எங்கட் கறிவுறுத்தி யிவ்வாறு சின்னாட்கள்
பொங்கு தமிழியலைப் போதித்துக்—கங்குல்பகல் 279

அற்றவிடங் காட்டி யருளி யடியேங்கள்
பற்றலற நீக்கிப் பணிகொண்டு—முற்றும் 280

சரியென்று சொன்னவுடன் சங்கமர்கள் கூடிக்
குருவென் றடைந்தமுறை கேள். 281

சிந்து.

கேளுங்க ளன்பர்களே! ராமலிங்கம்
கீர்த்தியுட னருள்பெற்று வந்தவிதத்தை—கேளுங்கள் 1

என்னென் றெடுத்துப்புகழ்வேன்—சுவாமி
எழில்பெறு மொற்றியினி லழுதழுதங் 2

கருட்பெருஞ் செல்வமுற்றே—ஐயன்
ஆனந்த மாகச் சென்னை நகர்வரவே 3

குருகுல வாசஞ் செய்ய—அன்பர்பலர்
கூடியே இவரிடத்தைத் தேடியே வந்து 4

அடிபணிந் தவரிடத்தில்—சென்னையில்
ஆனகாலம் போனசில காலமிருக்கப் 5

போகலா மென்று சொல்லி—சுவாமிகட்குப்
பொதுவாக வீடுகூட மாடமதுவும் 6

கனதன வான்களுடன்—இளங்
கதிரவன் நடுவினி லெழுந்ததுபோல் 7

மாணவ ரொருபாலும்—மற்ற
மாதவ ரொருபாலு மதித்திடவே 8

சங்கமெவற் றினுக்குமேலாஞ்—சுத்த
சமர சன்மார்க்க சங்கமெனக்கொண் 9

டிந்திரன் கொலுப்போலே—சுவாமிகள்
ஏகமன தாகசிவ போகமதையே 10

எடுத்துரைத் தவரவர்க்கு—மாணாக்கர்
இருக்கும்பக் குவங்கண்டு பாடமுஞ் சொல்லி 11

விசிராந்தி யாயிருக்க—தொழுவூர்
வேலாயுத முதலியா ரெனும்புலவர் 12

கேட்டா ரிவர்பெருமை—ராமலிங்கம்
கேள்வியுயர் நாவலர்க்கு மாபெரியவர் 13

முதலியா ரவர்பெருமை—முன்னோர்
மொழிந்ததைச் சொல்லுகிறேன் தெரிந்தளவில் 14

வடமொழி தென்மொழியிரு—வாரிதனை
வாய்மடுத்த உபயக லாநிதியென்பார் 15

இன்னவ ரிதைக்கேட்டுச்—சுவாமியை
எதிரிட்டுச் சோதிக்குந் திறமதனால் 16

எண்ணியேசங் கச்செயுளென்று—பழைய
ஏட்டிலொரு வாசகத்தைக் கூட்டி யெழுதிச் 17

கூழைக்கும் பிடுபோட்டு—சுவாமியிடம்
கொண்டுவந்த ஏடதனை யண்டிக்கொடுத்தார் 18

காட்டியதை வாசித்துவள்ளல்—இதுதான்
கற்றுக்குட்டி யியற்றிய தென்றே யெறிந்தார் 19

பார்த்தார் முதலியாரும்—தேகம்
பதறியே வள்ளலடி தனில்விழுந்து 20

வாய்விட் டலறியங்கே—சுவாமியிடம்
வந்ததுவுந் தந்ததுவு முந்தைமுதலாய் 21

வள்ளலிடம் சொல்லியிவரும்—என்னை
மாறாக நினையாமல் பிள்ளையது போல் 22

கொள்ளவேணு மென்று துதிக்க—சுவாமிகளும்
கொண்டுமுதல் மாணாக்க னென்றே யணைத்தே 23

ஏகபோக மாக இவர்கள்—சிதம்பரம்
போகவேணு மென்றுவெகு தாகமுடனே 24

ஆதித்த னுதித்ததுபோல்—சுவாமி
அரகர வென்றசத்தம் திசைபரவ 25

விட்டார் சென்னை நகர்—சிதம்பர
வீதியி லிவர்கள்வர மாதவர்களும் 26

சேர்ந்தா ரெல்லோரும்—நாமாவளி
செப்பியிட நாலுவீதி யொப்பியே வந்து 27

இருந்தார் மடமதனில்—சுவாமிகள்
எல்லோரு முண்டுபசி யல்லுங் கழிய 28

கதிரவ னுதிக்குமுன்னே—வள்ளலைக்
கண்டவெகு தனவான்கள் கொண்டங்குளுப்பை 29

குறைவிலா தவர்கொடுக்கச்—சுவாமி
கொண்டவெண்ண மதன்படி சன்னிதிசென்று 30

கோவில்வல மாகவந்து—சுவாமியைக்
கும்பிட் டழுதகண்ணுங் கம்பலையுமாய் 31

பாடிவெகு நேரமட்டும்—ஐயன்
பாடியங்நா ளுபந்யாச மெதுவென்னவே 32

கொல்லா விரதமதை—யின்னதென்று
கூறவேண்டும் பாரிலிது நேரில் தெரிய 33

என்றுசிலர் கேட்டவுடன்—நீங்க
ளெல்லோருந் தன்னுயிர்போல் மன்னுயிர்களைக் 34

கொண்டா லது வென்றே—அவரவர்
கொன்றருந்தும் புலைத்தொழில் கூடாதென்று 35

முடித்தா ருபங்யாசம்—இதனை
முற்றுங்கேட் டிருந்த எதிர் தீக்ஷிதரும் 36

நாவல ரென்ற சொற்குப்—பொருளினை
நன்றாயுரைத் திடுவீர்க ளென்று மொழியக் 37

கேட்டவுடன் சுவாமியவர்கள்—இதற்குக்
கீழுரையும் மேலுரையும் பலவுளவால் 38

எதையெடுத் துமக்குச் சொல்ல—என்றே
எந்தையவர் கேட்டவுடன் உள்ளவுரைகள் 39

அனைத்தையும் உரைத்தருள்வீர்—எனக்கேட்
டத்தனையும் மெத்தவிரி வாயுரைக்கக் 40

கேட்டார் தீக்ஷிதரும்—இதற்குமுன்
கேடில்லா ஆறுமுக நாவலருக்கும் 41

நீட்டா லிருவருக்கும்—அங்கே
நேரிட்ட விரோதமதாற் கேட்டவுடனே 42

வாய்ப்பறை கொண்டடித்து—நாவலர்
வல்லவர்பே ரிக்கதியே யாச்சுதென்று 43

கொண்டா னடித்துக்குதித்தார்—அன்பர்கள்
குதூகல மாகவே கொக்கரித்தார் 44

ஆறுமுக நாவலரவர்—இதனை
யார்சொன்னா ரென்றுமிகு ஆரவாரமாய்க் 45

கேட்டதைச் சாக்ஷிவைத்து—நேரே
கலெக்ட ரிடத்திலிந்தப் பிராதைக் கொடுத்து 46

வாக்கு மூலம் உறுதி செய்து—வந்த
மறுமூன்றா நாள்சம்மன் சுவாமிக்குவரப் 47

படித்தார் வாசகத்தை—நாளைப்
பகல்நாழி பத்துக்கு விசாரணை யென்று 48

வரையப்பட் டிருந்ததனைப்—பார்த்துவள்ளல்
மற்றையநாள் பத்துநாழிக் காஜராகவே 49

கண்டார் நாவலரும்—சுவாமியைக்
கண்டவுடன் திடுக்கிட்டு நின்றவுடனே 50

பக்கத்தி லிருந்தவரும்—இன்னும்
பாரிஸ்டர் முதலவர் துரையுடனே 51

எழுந்திரு கைகூப்பி—சுவாமியை
இருந்திடுக என்றந்தத் துரைசொல்லவே 52

கண்டார் துரையவரும் நாவலரைக்
கண்டுவெகு எக்களிப்புக் கொண்டே யவரை 53

மற்றிவரா ரென்று கேட்கப்—பிரதி
வாதியிவர் ராமலிங்க சுவாமி யென்னவும் 54

சிரித்தார் துரையவரும்—பிரதி
வாதியைக் கண்டவுட னெழுந்ததென்ன ? 55

என்றுதுரை கேட்டவுடனே—சன்னியாசி
எவருக்கும் பெரியவ ரானதாலே 56

இருப்பது கூடாதென்று—நானும்
எழுந்தே னம்முறைபற்றி யென்று சொல்லவே 57

கேட்டார் ஞாயமிதைக்—கூட்டில்
ஏற்றும லெதிராக நின்றவர்களைச் 58

சிலமுறு நீங்க ளிருவர்—பேதமுற்ற
செய்திவந்த தென்னவென்று துரைகேட்கவே 59

நமக்கொன்றுந் தெரியாது—தீக்ஷிதர்
நாவலரெ ன்னும்பெயர்க்குப் பொருள்கேட்கவே 60

உடன்பா டெதிர்மறையாம்—இயல்பற்றி
உரைத்தனம் பலபொருள் உள்ளவை யெல்லாம் 61

வேறொன்றும் மிகையாக—அச்சபையில்
விளம்பவில்லை யென்றுவள்ள லுரைத்திடவே 62

துரையவ ரதைக்கேட்டு—வழக்குச்
சரியல்ல வென்றுசொல்லித் தள்ளிவிடவே 63

பிடித்தார் ஜெயக்கொடியை—ராமலிங்க
பிள்ளைவெளி வந்தவுட னெல்லவருமாய் 64

தந்தன—தனதனனு.

அகவல்.

ஜெயஜெய வென்று ஜெயக்கொடி பிடித்து
அயனரி அமரர் அறியவொண் ணாத
பெரும்புகழ் வாய்ந்த பிள்ளைப் பெருமான்
குருகுல வாசங் கொண்டனர் மூதூர்த்
தில்லையிற் சிலநாள் திறமுட னிருந்தங்
கெல்லையில் லாம லெழுதினர் செய்யுள்
எழுதிய பாசுர மெல்லாங் கனிவாய்
அழுதழு தையன் அடியினிற் சாத்திப்
பழுதற அவையிற் படித்தரங் கேற்றி
அடியவர் சிலரா லச்சிட் டதன்பின்
படியுளோ ரெல்லாம் பக்தியாய்க் கொண்டனர்
விருப்பற நாவலர் மிகுமழுக் காற்றால்
அருட்பா வன்றிது மருட்பா வென்றே
கண்டவா தூற்றிக் கொண்டனர் பாவம்!
தண்டமிழ்ப் புலமை சான்றிடும் பெரியரும்
எண்டிசை யுள்ள யாவருங் கூடித்
தொண்டுசெய் திறத்தால் துடிதுடித் தனரதைக்
கண்டனர் சுவாமி கவலைக ளேனென
விண்டனர் நாவலர் விளம்பிய வெல்லாம்
அவல மனத்தா லறிந்திதைச் சொன்னீர்
திவலை மனத்தார் சிறப்புறு வாரோ
நாவல னல்லன் நாவலந் தீவன்
ஆவல்கொண் டொருவரை யடாதவ னென்ன
மாவலி யுடையான் மற்றவர் புகழுவே
யென்றவ ருரைத்தே யிதுமுத லாகச்
சென்றுநாம் யாத்திரை சிவஸ்தலம் பலவுங்
கண்டு வரவும் கருத்தென வுரைக்க
நன்றென அன்பர் நாடிய வுடனே
தண்டு கமண்டலம் தானுளர் சிலபேர்
பண்டைய காலப் பாம்போல் சிலபேர்
அண்டையி லுள்ள யாவருங் கண்டு
ஒன்றெனச் சேர்ந்திடு மொருமொழி யுளதாய்ச்

சென்றவர் சென்று திருச்சிற்றம் பலத்தைத்
திருவரு ளாலே திருவடி யேத்தி
கங்கை யமுனை கவின்கோ தாவரி
அங்கங் குள்ள தீர்த்தங்க ளாடி
அரவணி யண்ணல் புலியூ ரதுவும்
திருவருள் பெற்ற திருத்தணி மலையும்
கருவதை நீக்குங் காழித் தலமும்
விண்ணோர் முடியுடை யண்ணா மலையும்
பெறுவதற் கரிய பேரையூர் முதலாய்
அறிவதற் கரிய சிவஸ்தல மனைத்தும்
தெரிசித் துள்ளஞ் சிவமய மாகிப்
பவக்கட லொழிய பார்வதி புரத்தில்
தவக்கட லென்னத் தபோதன ரிருக்க
வானவர் மதிக்க வதிந்திடுங் காலை
தேனதை யுண்டு திகழ்வண் டென்ன
ஞானம துண்டு ஞானவா ளாகி
ஈனந் தவிர்த்தங் கிடைவிடா நிட்டை
ஊனும் உயிரும் உடலும் வெறுத்துக்
கோனை நினைத்துக் குறித்திடுங் காலை
மாலயன் காணா மலரடி காணக்
கோலமுங் குணமுஞ் சீலமு மேவி
ஞாலந் துதிக்க நண்ணினர் கருங்குழி
அவ்வூ ரதனி லன்புரு வானவள்
சீலமுஞ் சிறப்பும் சேர்ந்தவள் மூவித
காலமுங் கணக்குங் கண்டவ ளினிய
பாலுறு மொழியவள் பண்பாய் யாரையும்
பாலனுக் கொப்பாய்ப் பார்ப்பவள் வீட்டில்
தங்கி யிருந்து தண்டமிழ் அமுதம்
கொண்ட பனுவல் விண்டனர் பலவாய்
ஆறுந் திருமுறை அனைத்தையும் அன்பாற்
கூறமா ணக்கர் குறைவற வெழுதினர்
சீரிய செய்யுள் சிறப்புட னெழுத
ஆரினும் பெரிய அம்மையா ரவரும்
விடிவிளக் கெண்ணெய் வெந்நீர் முதலாய்

அடிகளுக் கறுதின மளிப்பவ ளொருநாள்
எண்ணெயை மறந்து எழினீர் வைத்துக்
கண்டுயில் கொண்டு காலையிற் கண்டு
என்வய தாகி யிளைத்தகா லையா
எண்ணிலேன் மறந்தேன் எண்ணெயை வைக்க
என்றதைக் கேட்டே யிடைவிடாத் தீபம்
கொண்டுநா னெரித்துக் குறைவிலா எண்ணெய்
இன்னமு மிருப்ப திதோபா ரென்றத்
தண்ணீ ரதனைத் தானவர் கொடுக்க
எண்ணெயென் றனையே இதோபார் தண்ணீர்
என்றதைக் கேட்க யாவருங் கண்டு
நன்றிது வென்ன நகைத்தனர் வள்ளல்
கண்டதன் படியே கருத்துள திதுவென
என்றொரு பாசுரம் எழுதின ரையன் ;

அதுதான்,

"மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லையென்றார்
மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி கின்றேனோர்
புதுமை யன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னைநகர் நண்பர்களே
செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கும் எரிந்ததுசன்
னிதியின் முன்னே."

எனுந்திரு வருள்விளக் கெய்திய இந்தப்
பாசுர மெழுதிப் பாவலர் காண
நேசமு முற்று நிராமய மாக
ஆறுந் திருமுறை யடங்கலு முடித்தே
ஓரா தொன்று மொருவழி யதனால்
நேரா வொன்றை நிச்சயஞ் செய்து
பாரா தொருவர் பார்க்கவொண் ணாத
மேட்டுக் குப்பம் மேடதிற் குடிசை
நாட்டார் காண நாலைந் தாண்டு
வாட்டமில் லாமல் வருந்தியே யோகம்

ஒருநா ளிருநா ளோரெட் டதனில்
மறுநா ளுணவு மற்றவர் கொடுக்க
வருநா ளொருநாள் வந்தோர் தினத்தில்
மருவிய முதலியார் மற்றவ ருடனே
பார்வதி புரமதிற் பாவலர் புகழ
ஓர்திருச் சன்னிதி யொருவருங் காணு
சத்திய ஞான சபைதனைக் கட்டி
எத்திசை யோர்க்கும் எம்மதத் தவர்க்கும்
முத்தியை யளிக்கு மோனநன் னிலையை
மாணுறக் காட்டும் வகையதா யிரெண்
கோணமு மமைத்துக் கொடுமுடி சிகரமும்
காணும் படியாய்க் கட்டுவ தாரென
முதலியா ரெழுந்து முன்வந்து நின்று
அடிமைக் கிட்டா லதன்படி செய்வேன்
திறமதா யிதுபோல் தெரியக் காட்டி
நலமதாய் முகூர்த்த நாளிட் டதன்பின்
செய்து முடித்த திறமதைச் சொல்லிக்
கும்பாபி ஷேகங் குறைவறச் செய்து
அருட்சோதி தன்னு லடைந்ததை வைத்தறு
நூற்றுட னிருபதோ ராயிரஞ் சுவாசமும்
சங்கிலி யிட்டுச் சபைதனைச் சுற்றித்
திரையே ழிட்டுத் திகழ்தைப் பூசம்
குறைவிலா ஜோதி கொண்டதைக் காட்ட
இப்படி யிருக்க இடையிலுள் ளவர்கள்
தங்கம் செய்வதாய்த் தானவர் கொண்டு
எங்குஞ் சொல்லி யிருப்பதைக் கேட்டு
கலெக்டர் முதலோர் கடுஞ்சின முற்றுச்
சாமியைக் கண்டு சந்தத மவர்க்குப்
பாராக் கொடுத்துப் பக்கத்தி லிருக்க
ஓரா தொன்றும் ஒருவழி மனத்தால்
காட்சியைக் கண்டு கருணையில் லாத
சாட்சியி லிருக்கத் தகாதென் றெண்ணி
மாட்சிமை யான மாணுக்க ரவரை
ஆட்சிய தாக அநுதினம் யார்க்கும்

குக்ஷிக் கன்னங் கொடுமெனச் சொல்லி
வீக்ஷண் யத்தால் வீடது கூடத்
தாழ்ச்சியில் லாமல் தான்போய் நாளை
சூட்சமுங் காணீர் சொரூபத்தை யன்பொடு
நீங்களெல் லோரும் நிறைமன துடனே
இங்கே சிலநா ளிருந்திடு மதன்பின்
இதுமுத லிரண்டரைக் கடிகையில் வருவேன்
அவரவ ரகமதி லானந்த மாகப்
பவவினை தீரப் பார்த்திடுங் காலை
சீமுக வருஷம் சிறந்ததைத் திங்களிற்
புனர்பூ சத்திற் போயவர் மறைந்தார்
என்னுமிச் சரித மியம்பின னன்பாய்
வானவர் முனிவர் மாதவர் வாழி!
வாழி! வாழி!! மாநிலம் வாழியே!!!

வேண்டுகோள்.

(உயிர் வருக்க மாலை)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அன்பெனும் வடிவா யருளெனு முயிராய் 1
அவதரித் தெங்கணு மதுவாய்த்
தன்புகழ் வடலூர் பார்வதி புரத்திற்
றனிநடம் புரியுமெய்ப் பொருளே
என்பவ நோயா லென்னுளம் பதறி
யிருப்பதுன் றிருவுள மறியும்
துன்புறு தெளியே னின்றிருப் புகழைத்
துதித்திட வரமெனக் கருளே.

ஆறிரண் டாண்டா யருள்பெற வேண்டி 2
யநுதின நின்புக ழல்லாற்
கூறிலேன் வேறு குறித்திலேன் வள்ளால்!
குவலயந் தனிலெழுந் தருளி
மாறிலா நினது கருணையை வழங்கி
மலர்ப்பத தரிசன மடியேன்
தேறிடக் கண்ணுற் கண்டுளங் களிக்கச்
செய்துநல் வரமெனக் கருளே.

இன்னமு தளித்த என்பெருந் தாயே 3
எளியனேன் விண்ணப்ப மிதுகேள்
பொன்னுல கதுவும் பின்னுல காகப்
புகழ்பெறும் பார்வதி புரத்தில்
மன்னிய சிகரம் மதிலிரு புறமும்
வாவிகள் சூழ்ந்தெழின் மிகவே
முன்னமே யமைந்த முறைப்படி புதுக்கி
முடிக்கவெண் ணினன்முடித் தருளே.

ஈன்றவென் றாயே தந்தையே யுறவே 4
எழிலுறு பார்வதி புரத்தில்
ஆன்றவ ரடியா ரன்பரோ டெனையு
மடியவர்க் கடியனுய்ச் சேர்த்துச்
சான்றவர் குழாத்துட் கலந்துநின் புகழைச்
சந்ததம் வாழ்த்திடச் செய்து
மூன்றுவெம் மலங்க ளகன்றிடு நெறியின்
முறையுற வொழுகுமா றருளே.

உன்றுணை யல்லா லொருதுணை யறியே 5
னுன்றிரு வடிகள்மே லாணை
பின்றுணை யில்லாப் பேதையே னெனக்குப்
பேரருள் புரிந்திடா யெனிலோ
என்சொல்வா ருலகோ ரென்னையும் பழிப்பார்
யாதுநான் போம்வழி யெந்தாய்!
வன்கொடு மலத்தை நீக்கிநான் வாழ
வரமெனக் கருளுக வள்ளால்!

ஊனெடுத் ததனு லொருபய னறியே 6
னூரவர் சிரித்திடப் பெற்றேன்
மானெடுத் தவனு ரருட்பிர காச
வள்ளலே நின்றிருக் கரத்தாற்
றானெடுத் தென்னை யாளவு முனக்குத்
தக்கதே யாகுநீ மறுக்கி
லேனெடுத் திவனை யாள்கிலை யெனவே
எவருனைக் கேட்பவ ருளரே.

என்னிரு கண்ணே கண்ணினுண் மணியே 7
என்பெரும் வாழ்வுக்கோர் நிதியே
அன்னிய னல்லேன் நின்னடி யவர்க்கே
அன்புபூண் டவனுநா னலவோ

இன்னமு மென்னைச் சோதிப்ப தழகோ
ஏழையி லேழைநான் கண்டாய்
உன்னையும் பார்க்க என்னிரு கண்ணு
லுவப்பொடு வரமரு ளெனக்கே.

ஏற்றநற் குணமு மெழிலுய ருடம்பு 8
மியம்பிய நல்லற நெறியின்
மாற்றலில் லாம லுதவுவண் மையும்
வள்ளனின் மலரடி நினைக்குஞ்
சீற்றமின் மனமுந் தெளிந்தநல் லறிவுந்
தினமுநின் றிருப்புகழ் வழுத்தி
ஊற்றெழுங் கண்ணீ ருகுத்திடு மன்பு
முதவுக நாயினேற் குவந்தே.

ஐயநின் னருளா னின்றிரு வடிக்கே 9
அநுதினம் மாலைநான் சூட்டி
மெய்புள கித்துச் சைவநன் னெறியை
மேதினி யோர்பலர் கேட்கப்
பெய்மழை யதுபோற் பேதமில் லாமற்
பீடுறப் பேசிட வரமும்
உய்வகை யான கல்விமெய்ப் பொருளை
ஓர்ந்திட வரமுமெற் கருள்வாய்.

ஒன்றிரண் டல்லா லொருமொழி யதனி 10
னுண்மையை யுரைத்துநீ யெனக்கே
என்றுமோர் படித்தா யிருந்திடு நிலையி
லென்னையு மிருத்தியே கறங்காம்
வன்றிறன் மனத்தை யென்வய மாக்கி
வள்ளலே யன்புறுந் தனது
கன்றினைக் காக்குங் கபிலைபோ லென்னைக்
காத்துநற் கருணைசெய் வாயே.

ஓலமிட் டலறி மாமரத் தடியி 11
லோடிவந் தேனெனக் கேட்ட
ஆலமர் கடவுள் நால்வருக் குரைத்த
அரும்பத வுரைகளு முணர்த்தி
ஞாலமுன் காணப் போனவுன் றன்னை
நனவிலுங் கனவிலு மறியேன்
பாலனு னழவும் பார்த்திருப் பதுமுன்
பண்புறு திருவருட் கழகோ.

ஔவிய முதல்ரீ யறுவகைப் பகையு 12
மறுத்துநிர்த் தூளியாய்ச் செய்து
பௌவியப் படுத்தி யென்மன மதையுன்
பழவடி யார்கடம் பதத்திற்
றிவ்விய மலரிட் டருச்சனை புரிந்து
தினந்துதி செய்துபோற் றிடவே
ஒவ்விய படிநீ யுரைத்தெனை யாள
ஒருவரந் தந்தரு ளெனக்கே.
அக்கமா மணியும் வெண்டிரு நீறு 13
மணிந்துமெய் சிலிர்சிலிர்த் திடவே
மிக்கதோர் கூட்ட மடியவர் நடுவில்
விளங்கிநின் றிருவருட் பாவை
ஒக்கவே யிருந்து பக்குவப் படவே
யுளங்கசிந் துருகிட வோதித்
திக்கெலா முனது திருவருட் புகழைத்
தினஞ்சொலு மின்பவாழ் வருளே.

வாழி.

வாழி வாழி வாழிவாழி வள்ள லார்ம லர்ப்பதம்
வாழி வாழி வாழிவாழி வடலூ ரென்னு நற்றலம்
ஆழி சூழு முலகி லுள்ள அன்பர் யாரும் வாழியே
ஊழி தோறுங் கற்று ணர்ந்து வந்து ளோர்கள் வாழியே!

மங்களம்.

ஸ்ரீராம லிங்கத்துக்கு ஜெயமங்களம்—நல்ல
திவ்யஞான சங்கத்துக்குச் சுபமங்களம்.

மாருத வடலூர்க்கும் மறைநா லுணர்ந்தவர்க்கும்
பேருரு ஞானசபை பேசரிய பொற்சபைக்கும்—ஸ்ரீராம.

எத்திசையும் புகழ்பெறும் சித்தி விளாகத்துக்கும்
சுத்தமிர்த மயமான முத்தர்தம் ஓடைக்கும்—ஸ்ரீராம.

ஞானசம் பந்தரப்பர் நண்ணியசுந் தரமூர்த்தி
வானமணி வாசகர்க்கும் மற்றையமெய் யன்பருக்கும்

ஸ்ரீராம லிங்கத்துக்கு ஜெயமங்களம்—நல்ல
திவ்யஞான சங்கத்துக்குச் சுபமங்களம்.